எடுத்துக் கூறியதற்கு நானும் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேல் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நாட்டில் நடைபெறாவண்ணம், நம்முடைய பிரச்சினைகளை ஜனநாயக ரீதியில் தீர்த்துக்கொள்ள வேண்டும். நாம் கட்டிக் காத்து வருகின்ற மரபு வழியிலே நாம் தீர்த்துக்கொள்ள வேண்டும். நாம் மக்களை நம்பியிருக்கிறோம். மக்களிடத்திலே வாக்குகளைப் பெற்று, நம்முடையப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்கின்ற வகையிலே நம்முடைய நாட்டிலே ஆண்டாண்டுக் காலமாகக் கட்டிக் காத்து வருகின்ற ஜனநாயக பாரம்பரியத்தைக் காப்பாற்றுவதற்கு எல்லாக் கட்சிகளிலே உள்ளவர்களும் ஒத்துழைக்க வேண்டும். இளம் மாணவ நண்பர்கள் ஒத்துழைக்க வேண்டும், அவர்களுடைய பெற்றோர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, இந்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை விவாதிக்கவேண்டிய அவசியமில்லை என்ற கருத்தை, தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு, இப்பிரச்சினையை இங்கு விவாதிக்கவேண்டியதில்லை எனக் கருதுகிறேன். ஆகவே இப் பிரச்சினையை எழுப்ப என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

5. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 3.30 p.m. to-day, it has been decided that the Hon. the Minister for Electricity will initiate the discussion on the Electricity Board Budget to-day and the further discussion thereon would continue to-morrow. (14th November 1972).

6 1972-73-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வரவு-செலவுத் திட்ட அறிக்கை.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1972-73-ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையும், 1971-72-ம் ஆண்டின் துணை நிதி

1972 நவம்பர் 13] [திரு. ஓ. பி. இராமன்]

நிலை அறிக்கையும் இம் மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை @ இம் மன்றம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் வேண்டுகின்றேன்.

1948 ம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் 61 வது பிரிவின்படி, தமிழ்நாடு மின்சார வாரிய ஆலோசனைக் குழுவின் ஒப்புதலைப் பெற்றபின், தமிழ்நாடு மின்சார வாரியம், இந்த நிதிநிலை அறிக்கைகளை அரசுக்கு அனுப்பியது. ஆண்டு நிதிநிலை அறிக்கையும், துணை நிதிநிலை அறிக்கையும் சட்டமன்றத்தினால் விவாதிக்கப்படலாம் என்றாலும், இவ்வறிக்கைகள் குறித்து சட்ட மன்றத்தில் கூறப்படும் கருத்துக்களை மின்சார வாரியம் ஆழ்ந்து சிந்தித்து ஆவன செய்யும். சென்ற ஆண்டு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகளின் பேரில் நடைபெற்ற விவாதத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை ஒட்டி, மின்சார வாரியம் எடுத்துள்ள நடவடிக்கைகளை விவரிக்கும் அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கைகளை எல்லாம் மன்றம் ஏற்று மன்றத்தின் மூலமாக நல்ல ஆலோசனைகளை நல்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : சட்டமன்றத்தின் அலுவல்கள் முடிவடைந்து, மீண்டும் நாளை மாலை நான்கு மணிக்குக் கூடும். அதுவரையில் சட்டமன்றம் ஒத்திவைக்கப் படுகிறது.

பின்னர், சட்டமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

7. மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

***** 247 Order issued with G.O.Rt., No. 1731, Revenue, dated, 2nd August 1972 exempting from liability to entertainments tax, one cinematograph film show organised by the President, Building

a **82–85-B** ஆம் பக்கங்களில் இணைப்பு **IV** ஆக அச்சிடப்பட்டுள்ளது.